# அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில; A+ (CGPA:3.64) தகுதி பெற்றது)

**காரைக்குடி – 630 003**

நாள்: 22.5.2019

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் மைய நூலகத்தின் சார்பில் உலகப் புத்தக நாள் விழா 22.5.2019-அன்று மைய நூலக முனைவர் உமையாள் இராமநாதன் கருத்தரங்க கூடத்தில் நடைபெற்றது.



அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா. நா. இராஜேந்திரன் இவ்விழாவிற்கு தலைமையேற்று உரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில், புத்தகங்கள் பலருடைய வாழ்க்கையை மாற்றியிருக்கிறது என்பது உண்மை. எனவே புத்தகங்களை வாசிப்பதன் மூலம் நாம் நம்முடைய வாழ்க்கையை செம்மைப்படுத்திக் கொள்ள முடியும் என்றார். மாணவர்கள் தேர்விற்காக மட்டும் படிக்காமல் தொடர்புடைய பாட நூல்களை முழுவதுமாக படிக்கும் பழக்கத்தை மாணவர்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஒரு புத்தகத்தைப் பற்றிய கருத்தை தெரிவிப்பதற்கு முன்னர் அதனை முழுமையாக வாசிக்க வேண்டும். அப்படி வாசித்தால் தான் புத்தகத்தில் கூறப்பட்டுள்ள அடிப்படை கருத்தை உணர்ந்து வெளிப்படுத்த முடியும். வாசகர்களை ஈர்க்கும் வகையிலும், வாசகர்களுக்கு புரியும் வகையிலும் இருக்கும் புத்தகங்களே சிறந்த புத்தகங்களாக கருதப்படும். இத்தகைய புத்தகங்களை மாணவர்கள் தினந்தோறும் நூலகத்திற்கு வந்து வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் பா. மதிவாணன் அவர்கள் தமது சிறப்புரையில், வாசிப்பு, புத்தக வெளியீடு, புத்தக பதிப்புரிமை ஆகியவற்றை நோக்கமாக கொண்டு கொண்டாடப்படுவதே உலகப் புத்தக நாள் விழாவாகும். இன்றைய நவீன தொழில்நுட்ப யுகத்தில் திரைப்படம், தொலைகாட்சி, திறன்பேசி போன்றவை கருத்துப் பரிமாற்ற கருவிகளாக செயல்பட்டாலும், புத்தக வாசிப்பு தரும் அனுபவத்தை அவற்றால் கொடுக்க இயலாது. புத்தக வாசிப்பு அனுபவம் என்பது நம் இதயத்தோடு நேரிடையாக பேசும் அனுபவத்தை தரக்கூடியது. மனிதகுலம் கண்டுபிடித்த மகத்தான கண்டுபிடிப்பு புத்தகத்திற்கு அடிப்படையாக விளங்கும் எழுத்து ஆகும். இந்த எழுத்துப் பண்பாடு தமிழ் சமூகத்தின் அடையாளமாகும். தமிழர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுத்துப்பண்பாட்டை இலக்கணமாக ஆக்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும் என்றார்.

அழகப்பா பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் பேராசிரியர் த.ரா.குருமூர்த்தி அவர்கள் தமது வாழ்த்துரையில், மாணவர்கள் வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் தங்களது திறமையை வளர்த்துக் கொள்ள முடியும். புத்தக வாசிப்பு அனுபவம் என்பது உணர்வோடு கலந்த ஒன்றாகும். முழுஈடுபாட்டோடு வாசிக்கும்போதே முழுமையான அறிவு வளர்ச்சி ஏற்படும் என்றார்.

மைய நூலகத்தை சார்ந்த நூலகர்கள் மற்றும் அலுவலர்கள், நூலக மற்றும் தகவல் அறிவியல் துறையை சேர்ந்த பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், தொலைநிலைக் கல்வி இயக்கக இயக்குனர் பேரா. சு. ராசாராம், பேராசிரியர்கள் முனைவர் மு.பாண்டி, முனைவர்.அ.செந்தில்ராஜன் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

முன்னதாக மைய நூலகர் முனைவர் அ. திருநாவுக்கரசு வரவேற்புரையாற்றினார். முனைவர் சி. பாஸ்கரன், நூலகர் நன்றி கூறினார்.

பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு

பதிவாளர்